www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஆடி 2000

இதழ் -16

"பாவம்.. அவை தீர்வுத்திட்டத்த விவாதிச்சி முடிக்கிறதுக்கிடையில நாங்க தமிழீழத்தில கொடியேத்திடுவம். அதுக்குப் பிறகு இவை சுயநிர்ணயம் சரியா பிழையா என்டு இருந்து வாதிக்கட்டும்"

## தமிழீழக் குடியரசே இறுதித் தீர்வு !

சிறிலங்கா அரசினால் முன்மொழியப்பட்ட இடைக்காலத் தீர்வுத் திட்டமானது, திம்புக்கோரிக்கைகளின் அடிப்படைகளையே நிராகரிப்பன. திம்புக் கோரிக்கைகளைக் கடந்து எமதுபோராட்டம்நீண்ட தூரம்வளர்ந்து விட்டது. இந்தவகையில்எமது போராட்டத்திற்கான தீர்வாக முன்வைக்கப்படும் எந்தத் தீர்வுத் திட்டமும் திம்புக் கோரிக்கைககளை விட முன்னேறியதாகவே இருக்கவேண்டும். இது பற்றி ஏற்கனவே நாம் சித்திரை 13வது இதழில் எமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தோம்.

தற்போது, இத்தீர்வுத் திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் அரசியல் தரப்பினர் பகிரங்கமாக நிராகரித்து விட்டனர். நமது போராட்டம் வெற்றியின் நுழைவாயிலில் காலடி வைத்திருக்கும் இக்கட்டத்தில் போராட்டத்தை மழுங்கடிக்கும் கபட நோக்குடன் "இடைக்கால நிர்வாகம்" எனும் திட்டமொன்றை சிறிலங்கா அரசு முன்மொழிகிறது. இத்தனை அர்ப்பணிப்புகள் இழப்புகளூடாக அடைந்த வெற்றியைபாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் இருக்கும் நமது தேசம், இவர்கள் தீர்வுத்திட்டமொன்றை முன்வைத்ததற்காக நாம் ஈட்டிக் கொண்டுள்ள அரசியல் வெற்றிகளிலிருந்து கீழிறங்கி வரவேண்டுமென கருதிக் கொண்டிருந்தால் அது அவர்களின் அரசியல் மடமையாகும்.

சிறிலங்கா இனவெறி அரசைப் பொறுத்தவரையில், அது எப்பொழுதுங் காலங்கடந்த தீர்வுகளையே நமது போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் முன்வைத்து வருவதானது நிலவும் சூழலுக்கேற்ப அரசியலை எதிர்கொண்டு துணிகரமாக அக்கட்டத்தைக் கடந்து செல்லமுடியாத அதன் கையாலாகாத் தனத்தையே காட்டுகிறது. அற்பத்தனமான தீர்வுகளுக்கு நமது தேசத்தின் தேச அரசை அமைப்பதன்பாலான உயர்வான இலட்சியத்தையும், வீரமிகுப் போராட்டத்தையும் சமப்படுத்திட முயல்வதனூடாக சிறிலங்கா அரசு நம்மை, நமது போராட்டத்தை அவமதிக்கும் காரியத்திலும் ஈடுபடுகிறது.

சிங்கள அரசும் சோவினிச அணிகளும், தமது பாசிச கொள்கையில் உறுதியாக கால்பதித்து நின்றபடி, தமது சோவினிச - பாசிச கண்களூக்கூடாக நமது போராட்டத்தை பார்க்கின்றனர். இதன் காரணமாக அவர்களால் "தமிழர்களையும் தமிழர்களது போராட்டத்தையும் அழித்தொழிக்க வேண்டும்" எனும் முடிவிலிருந்து தான் தமது அரசியலை தொடங்க முடிகிறது.

உரிமைக்காக போராடும் மக்களுக்கு, அம்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வை வழங்கவேண்டும் எனும் சிந்தனை எந்தக் காலத்திலும் இவர்களின் மூளைகளில் உதிப்பதில்லை- உதிக்கப்போவதுமில்லை. இவ்வாறு இனப்பகைமையால் இறுகிப் போயிருக்கும் இந்தப்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## அடக்குமுறை ஆயுதமாக மருந்து வகைகள்!

10 வருடங்களுக்கும் மேலாக பொருளாதார தடை கொண்டு நம்மை கூட்டாக தண்டித்து வரும் சிறிலங்கா அரசு, கடந்த ஆறுமாத காலமாக, கடுமையான மருந்து தடை கொண்டு நம்தேசத்தினை தண்டித்து வருகின்றது. மிகவும் மோசமான கொடுமை இதுவாகும்.

ஆனையிறவு வெற்றிக்கு பின்பு யாழ்ப்பாணம் விடுதலையுறவிருந்தது சர்வதேச பிரச்சனையாக்கப்பட்ட அளவிற்கு, சிறிலங்காப் படையினரின் நிலை மனிதாபிமான பிரச்சனையாக்கப்பட்ட அளவிற்கு, தமது பிராந்திய பாதுகாப்புப் பிரச்சினையாக்கப்பட்ட அளவிற்கு மருந்துத்தடைகள் மூலமாக நமது தேசம் நிர்மூலமாக்கப்படுவதும், வதைக்கப்படுவதும் மனிதாபிமான பிரச்சனையாகவும் சர்தேச அக்கறை மிக்கதாகவும் மாற்றப்படவில்லை.

அந்தளவிற்கு நமது வெற்றியை தாமதப்படுத்த இந்த கூட்டுத்தண்டனைக்கு சர்வதேச சக்திகளும், மனிதாபிமான குத்தகையாளர்களும் தமது மௌன ஒப்பதலை தந்து வருகின்றனர். இந்த சக்திகள் அனைத்தின் ஒரே இலக்கு நமது மக்கள் வருத்தி விடுதலைப் போராட்டத்தின் பால் அவர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகும். நமது தேசம் அதன் வெற்றி இலக்கை அடையும் சந்தர்தப்பத்தில் நம் மீது இதுபோன்ற கூட்டுத்தண்டனைகள் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பல முனைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அகப்பட்டுக்கொண்டு, போர் திறன் இழந்து தப்பியோட தீர்மானித்த படைகளுக்கு, எக்காரணம் கொண்டும் வெளியேறக் கூடாதென்ற கட்டளையுடன், அதி பயங்கர ஆயுத தளவாடங்களை அரசு அள்ளிக்கொடுத்துள்ளது. விரக்தியின் விளிம்பிலும், உயிர்பயத்துடனும் தவிக்கும் சிறிலங்கா படைகள், இந்த அழுத்தங்களை நமது தேசக்தின் மீது கொடூரமாக கட்டவிழ்த்து விட்டுள்ளது. சாவகச்சேரி பலகுழல் பீரங்கிகள்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## மன்னார் கரையில் இந்திய சுவடுகள் ?

இந்திய பொலிசின் அடையாள அட்டை மன்னார் கரையில் நமது மீனவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனால் மன்னார் மக்கள் மாத்திரமல்ல, இந்த தகவலை அறிந்து கொள்ளும் ஈழத்தமிழர் அனைவரும் அதிர்ச்சியடைவது புதுமையல்ல. ஏன் இந்திய பொலிசின் அடையாள அட்டை மன்னார் கரைக்கு வந்தது? இந்திய பொலிஸார் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பாக வந்தார்களா? அப்படித்தான் இருந்தாலும் அவர்கள் ஏன் தமிழீழ கடற்பகுதி வரை வரவேண்டும்? அல்லது இதன் பின்னால் வேறு ஏதும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா?

நமது மக்கள் கடல் நடுவில் அநாதரவாக தவித்த நிற்கையில், வெயிற்கொடுமையால் பச்சிளம் குழந்தைகள் நா வறண்டு இறந்து விழுகையில், அகதியாக வந்த நமது தேசத்துப் பெண்ணை இந்திய மீனவர்கள் கடலில் வைத்தே கடத்திச் செல்கையில் நம்மில் அக்கறை எடுத்து நமது மக்களுக்கு உதவிட முன்வராத தற்பொழுது, இவர்கள் என்ன காரணத்திற்காக தமது எல்லையைத் தாண்டி நமது கடற்பிராந்திய எல்லைக்குள் நுழைந்தனர்?

நமது கடற்பகுதியை இவர்கள் இரகசியமாக கண்காணிக்கும் வேலையில் இறங்கிவிட்டுள்ளார்களா? ஏற்கனவே இந்திய அரசு சிங்கள பேரினவாதத்திற்கு பின்னணியில் செயற்படுவதாக அறியக் கிடைக்கிறது. நேரடியாகவும் சிங்கள அரசுக்கு நிதியுதவிகளும் கடனுதவிகளும் வழங்குவதுடன் இராணுவ ஆலோசனைகளும் வழங்கி வருகிறது. இதெல்லாம் போதாதென்று தமிழீழ கடல் பகுதியில் தனது காவல்படையை அனுப்பி எம்மவர்களின் நடமாட்டத்தை கண்காணிக்கின்றார்களா? இந்த இரகசிய உளவு நடவடிக்கைகள் மீளவும் தமிழீழ விடுதலையை துவம்சம் செய்வதற்கானவையா?

விழித்திருப்போம் தேசமாக, எக்கணத்திலும் சூழும் பகை முறியடிக்க !

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# சிங்கள இனவெறிச் சக்திகளின் நிழலில் இந்திய உளவுப்பிரிவு?

ஈழத்தமிழருக்கு சமத்துவமான அரசியல் உரிமைகள் கிடைக்க விடாது, மட்டுப்படுத்துவதில் இந்திய அரசுக்கு பிரதான நலன்கள் உள்ளன. இதை ஏற்கனவே அது தனது நடவடிக்கைகள் மூலம் தெளிவாக நிரூபித்து வருகின்றது. இதனைப் பூர்த்தி செய்யும் வழியில் அது சிங்கள இனவெறி அமைப்புகளை ஊக்குவித்து வருகின்றது. இதன் மூலம் அதிகம் அழுத்தங்களை மேற்கொள்ளச் செய்து, அதன் மூலம் தான் தலையிடும் 'வெளி'யை உருவாக்க முனைகின்றது. இதுவே சிங்கள இனவெறி அமைப்புகளை பின்னின்று இந்திய ஆளுங்குழுமம் போஷிப்பதற்கான பின்புலமாகும்.

இந்திய ஆளுங்குழுமம் ஈழத்தமிழர் தேசியப்பிரச்சனையில் முற்றுமுழுதாக தனது நலன்களையே குறியாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. 80களின் முற்பகுதியில் எமக்குப் பயிற்சி, கருவிகள் மற்றும் இன்னோரன்ன உதவிகள் 'தரப்பட்டது' அனைத்துமே அதன் தேவையிலிருந்துதான் என்பதை 1987 இல் தலையீடு, இந்திய - இலங்கை ஒப்பந்தம், பின்னர் நம்தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் இவையனைத்தும் நிரூபித்துள்ளன என்பதோடு 'இந்திய அரசிற்கு நலன்கள் மட்டுமே உள்ளது' என்பது அவர்களது வெளிநாட்டமைச்சரின் குறிப்பில் தெளிவாகவே உள்ளது. இவ்வாறு, இதனை இந்திய ஆளும் குழுமத்தின் பிரதான நபர்களே பல தடவை ஒப்புக்கொண்ட பின்னர் வேறு என்ன சான்று வேண்டும்? இதைவிட எமது மக்களின் உயிர்களும், காயங்களும் மற்றும் பொருளாதாரச் சேதங்களும் இன்னும் அழியாச் சான்றுகளாக உள்ளன.

1985 இல் இந்தியஅரசை கிஞ்சித்தும் கணக்கெடுக்காது அடம்பிடித்த சிறிலங்கா அரசை, மேற்குநாடுகளின் பின் நின்ற சிறிலங்கா அரசை தனது முற்றுமுழுதான நலன்களுக்கு அடிபணியச் செய்ய, பாரிய கொழும்புக் குண்டு வெடிப்புகளையும் அனுராதபுர படுகொலைகளையும் இந்திய உளவுப்பிரிவு பின்நின்று ஊக்குவித்து நடாத்தியது.

1988 இல் இங்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில், அன்றைய இந்திய எதிர்ப்பாளரான பிரேமதாசவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க சிறிலங்க பாராளுமன்றத்தில் பிரேமதாசவிற்கு எதிரான மற்றும் தனக்கு ஆதரவாக செயற்படக் கூடிய கட்சிகளான, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள், மற்றும் தமிழ் அமைப்புகளுக்கு தேர்தல் செலவிற்குப் பணத்தை இந்திய உளவுப்பிரிவு கொட்டிக் கொடுத்தது. பாராளுமன்றத்தில் இக்கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்வதற்கென இந்திய உளவுப்பிரிவு மேற்கொண்ட இந்த முயற்சியும் பணத்தை பெற்றுக்கொண்டவர்கள் ஒப்புக்கொண்ட ''இரகசியமாகும்.''

தற்போது அரசியல் மற்றும் இராணுவ சமபல நிலைமையானது முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, ஈழத்தமிழரின் பக்கம் குறிப்பாக விடுதலைப்புலிகளின் பக்கம் சென்றுவிட்ட நிலையில் மறுபடியும் இந்திய அரசு தன் சதுரங்க விளையாட்டை ஆரம்பித்துள்ளது. ஈழத்தமிழரின் இந்த பாரிய வெற்றியை இந்திய அரசு மட்டுமல்ல எந்த ஆதிக்க சக்திகளும் எதிர்பார்க்கவில்லை என்பது பழைய செய்தி. இந்திய அரசின் எதிர்பார்ப்பு, சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் யுத்தத்தில் மேலும் மேலும் பலவீனப்பட்டு தனது காலடிக்கு வர வேண்டும் என்பதாக இருக்கின்றது. யதார்த்தம் இதற்கு எதிர்மாறாகி விட்டமை கண்டு திகைத்த இநதிய அரசு சுதாகரித்துக் கொண்டு, இராஜதந்திர அழுத்தங்கள், நேரடி அச்சுறுத்தல்கள், மூலமாக நேரடியாக அரங்கிற்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இங்கு நடைபெறுவது இன்னொரு நாட்டின் உள்நாட்டுப்பிரச்சனை என்ற தனது வேடத்தை கலைத்துக்கொண்டது. இது பற்றி முன்னர் நமது பத்திரிகையில் எச்சரித்திருந்தோம். இப்போதும் தனது முற்றுமுழுதான நலன்களை அடைவது, பாதுகாத்துக்கொள்வது என்பதுதான் அதன் இலக்காக உள்ளது. சிறிலங்க அரசுக்கு இரண்டு

தொடர்ச்சி 7ம் பக்கம்

## ஜனநாயகத்திற்கான போரில் குரல் நெறிக்கப்பட்ட எம்மருமைத் தோழர்களின் நினைவாக...

**பத்தாண்டு நினைவு**



தோழர்: தர்மலிங்கம்
(சிவராசா, சீலன்)
வீரமரணம்: 19 மே 1990



தோழர்: சண்முகவடிவேல்
(வரதன்)
வீரமரணம்: 11 ஜுன் 1990

**ஒன்பதாவது ஆண்டு நினைவு**



தோழர்: நோபட்
(டொமினிக், கேசவன்)
வீரமரணம்: 17 மே 1991

தேச விடுதலைக்கான அரசியலில் பன்மைத்துவம், மக்களுடனான உறவிலும் கட்சி அகவாழ்விலும் ஜனநாயகம், விட்டுக்கொடாத தேசப் போராட்டம், சமரசமற்ற சமூகப் புரட்சி . . .

ஆகிய கொள்கைகளின் வழிநின்று தமிழீழ தேச விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தவர்களும் எமது அமைப்பின் கருக்குழுவின் ஸ்தபாகர்களுமான நமது தோழர்கள், யாழில் கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டனர். தேசத்தினதும் மக்களினதும் விடுதலைக்காக புரட்சிகரக் கொள்கைகளை இறுதிவரையில் உயர்த்திப் பிடித்த எம்மருமைத் தோழர்களுக்கு சிரந்தாழ்த்தி அஞ்சலி செய்கிறோம். இவர்தம் நினைவுகளை எம் நெஞ்சில் சுமந்து நீண்ட பயணம் நடந்திடுவோமென உறுதியேற்கிறோம்.

இறுதி வெற்றி மக்களுக்கே!!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்தமிழர் நலன்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புக் கூட்டணி!

இரு மாதங்களுக்கு முன்னர் நமது போராட்டக் களத்தில் வெளிப்பட்ட உக்கிரமான போர் தற்பொழுது தணிந்த நிலைக்கு வந்துள்ளது. இந்த இடைப்பட்ட காலத்துள் 500க்கு மேற்பட்ட பொதுமக்களை யாழில்- குறிப்பாக தென்மராட்சிப் பகுதியில் - சந்திரிகா அரசு கொன்று குவித்திருப்பதுடன் 300க்கும் அதிகமானவர்களை படுகாயப்படுத்தியதுடன் பலரை அங்கவீனர்களாக்கியுள்ளது. இது ஓர் போர் மூலமான இனப்படுகொலை நடவடிக்கையாகும்.

தனது குரூரமான இப்படுகொலையை மூடிமறைத்திட தற்பொழுது தான் யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணப்போவதாக வெளியுலகிற்கு அறிவித்து வருகிறது சிங்கள அரசு. இதன் மூலம் தான் ஒரு "நேர்மையான" அரசென்றும், தமிழ் மக்களும் அவர்களது போராட்டத் தலைமையும் தான் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக உள்ளனர் என்றும் ஏககாலத்தில் ஒரு "அரசியல் பழியையும்" எம்மீது சுமத்தப் பார்க்கின்றது.

ஈழத்தமிழரான நமது அரசியல் வாழ்வை - நமது தலைவிதியை தமது அதிகாரப்பிடியில் வைத்துக் கொள்வதில் சிறிலங்கா அரசுடன் இன்னும் சர்வதேச ஆதிக்க சக்திகள் கூட்டுச் சேர்ந்துள்ளன. சிறிலங்கா - இந்தியா - அமெரிக்கா என தற்போது பகிரங்கமான மூன்று அடக்குமுறையாளர்களின் நலன்களுக்கு நமது தேசத்தின் இறைமை விலைபேசப்படுகிறது. இது பற்றி தமிழீழம் 15வது இதழில் "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்க அரசுகள்" எனத் தலைப்பிட்டு நாம் கருத்து வெளியிட்டிருந்தோம்.

புதிய உலக ஒழுங்கமைவுடன், தென்னாசியாவில் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் பிராந்திய முகவராக தற்பொழுது இந்தியா "சுயாதீனமாக" செயற்படத் தொடங்கியுள்ளது. பல மூன்றாமுலக நாடுகளினதும் பரஸ்பர அரசியல் உறவுகளைப் போன்றே இந்திய - சிறிலங்கா உறவிலும் அமெரிக்க நிழல் படிந்துள்ளது. இச்சக்திகள் நமது தேச அரசியலில் வெவ்வேறு கோணங்களில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் நாம் எப்பொழுதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

87இல் அன்றைய ஜே. ஆர். அரசுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நோக்குடனும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திட்டத்துடனும் தமிழீழ வான்பரப்பில் "உணவு நிவாரணம்" எனும் பெயரில் அத்துமீறியது இந்தியா. இதைப் போன்றதொரு நடவடிக்கையை கடந்த ஜூன் மாதம் "நட்பார்ந்த" முறையில் மீள நிகழ்த்திக் காட்டியுள்ளது இந்திய அரசு. தனது வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கை சிறிலங்கா அழைக்காமலேயே சிறிலங்காவுக்கு அனுப்பிவைத்தது. இம்முறை சிறிலங்காவுக்கு 100 மில்லியன் டொலர்களை உணவுப் பொருட்களுக்காக "அன்பளிப்பாக" வழங்கியது. மேலும் 100 மில்லியன் டொலர்களை நம்மீது குண்டு வீசி அழித்தொழிக்க சிறிலங்கா அரசுக்கு கடனுதவியாக வழங்கியுள்ளது. இதனுடன், நமது தேசத்தால் எப்பொழுதோ கழித்துக் கட்டப்பட்ட "இடைக்கால நிர்வாகம்" எனும் நிகழ்ச்சி நிரலை நமக்கான தீர்வாக முன்வைக்கும்படி சந்திரிக்கா அரசுக்கு முன்மொழிந்துள்ளது.

தான் முன்மொழியும் தீர்வையே "தமிழர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக" கொண்டு இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும் எனும் உள்நோக்கம் இந்தியாவுக்குண்டு. இங்கு இந்திய அரசு "தமிழர் நலன்பாட்பட்டு" சிங்கள அரசை அழுத்துவது போன்றதொரு தோற்றத்தைத் தரினும், சிறிலங்கா அரசிற்கு உதவி வழங்குவதனூடாக சிறிலங்காவுடன் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதே இப்பயணத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன் மறுபுறம், அடிக்குமேல் அடி வாங்கி, கடன்சுமைகளுடன் தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ள சந்திரிக்கா அரசுக்கு இந்தியாவின் 200 மில்லியன் டொலர்கள் பெரும் "அதிர்ஷ்டமே". ஆனால் யுத்தத்தைப் பொறுத்தவரையில், முற்றிலும் அந்நிய அழுத்தங்கள் இன்றி தனது விருப்பத்திற்கமைய யுத்தத்தை முன்னெடுக்கவே சிறிலங்கா அரசு விரும்புகிறது. இதில் இந்திய ஒத்துழைப்பை அது விரும்புவது, ஈழத்தமிழர் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கே அன்றி "தீர்வு" காண்பதற்கல்ல.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை தலைமைதாங்கி வரும், தமிழீழ விடுதலைப் புலிகளை தவிர்த்துவிட்டு தீர்வொன்றை முன்வைப்பது எனும் சந்திரிகா அரசின் முன்மொழிவும், நாளுக்கு நாள் அதன் நிலைப்பாடுகளில் ஏற்பட்டுவரும் குத்துக் கரணங்களும் சிங்கள அரசின் கபடத்தனங்களையே நமக்கு வெளிப்படுத்துகின்றன.

சந்திரிக்கா அரசின் தற்போதைய ஒரே இலக்கு, அண்மித்துவரும் தேர்தலில் மீள அதிகாரத்திற்கு வருவதும், அதன் பின்னர் புதிய வழிமுறைகளுக்கூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் இறங்குவதும்தான்.

ஐம்பது வருடங்களுக்கும் மேற்பட்ட நமது தேசப் போராட்டத்தின் வரலாற்றில் எந்தச் சந்தர்ப்பத்திலாவது சிங்கள ஆளும் தரப்பு தமிழ் மக்களுக்கு நீதியும் நேர்மையுமான அரசியல் தீர்வைப்பற்றி சிந்தித்ததுண்டா? அப்படி ஏதாவதொரு காலங்கடந்த - மிக அற்பமான தீர்வை அரச தரப்பு முன்வைத்தாலும் இனவெறி சக்திகள் அதை முன்னெடுக்க இடமளிக்கின்றனவா? இத்தனை கசப்பான அனுபவங்களுக்குப் பின்னரும் சிறிலங்கா அரசின் தீர்வுகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வார்கள் எனக் கருதுபவர்கள் வரலாற்றை அறியாதவர்களே.

நம்மை நேரடியாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசும் அதற்கு பக்கபலமாக இருக்கும் சக்திகளும், நமது இதுவரைகால நீண்ட போராட்டத்திற்கு வைத்திடும் தீர்வுகள் நமது தேசத்தின் நகைப்பிற்குரியனவாயுள்ளன. அவர்கள் அனைவரும் தத்தம் நலன்களில் திடமாக கால்பதித்து நின்று, முடிந்தவரையில் நமது விடுதலை வேள்வியில் தமது நலன்களை வார்த்துக்கொள்ள தயாரிப்புகள் செய்து வருகின்றனர்.

ஈழத்தமிழரான நமது நலன்கள், நமது தேச அரசை - தமிழீழ குடியரசை அமைப்பதுடனேயே பிணைந்துள்ளன. நமது அனைத்து போராட்ட அரசியல் நடவடிக்கைகளும் வழிமுறைகளும் தேச அரசை அமைப்பதையே தற்போது இலக்காகக் கொண்டுள்ளன. இதன் மூலம் மாத்திரமே நமது தேசிய நலன்களை நம்மால் உறுதிப்படுத்த முடியும். தமிழீழ அரசைஸ்தாபிப்பதனூடாக மாத்திரமே ஈழத்தமிழரான நமது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதை இதுவரைகால நமது போராட்ட வரலாறு உறுதிப்படுத்தியுள்ளது. தீர்வுத் திட்டங்கள் பற்றி அவர்கள் விவாதிக்கட்டும். நமது அக்கறைகளையும் கவனத்தையும் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துதில் ஒன்றுகுவிப்போம்.

- சுபத்திரா -

## மக்கள் யுத்த குழுவினரின் ஒருமைப்பாடு!

இந்திய அரசினதும் இந்திய சமூக அமைப்பினதும் சுரண்டல் கொள்கைகளுக்கும் ஜனநாயக மீறல்களுக்கும் எதிராக அடக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் மக்கள் யுத்தக் குழுவினர் தமிழீழ விடுதலையை நசுக்கிட இந்தியப்படை சிறிலங்காவுக்குச் செல்வதை எதிர்த்துள்ளனர். இந்திய மக்களின் விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடும் அமைப்பொன்று இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பது நமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும்பலமாகும். இந்திய அதிகாரத்துவ அரசின் அனைத்து அடக்குமுறை வடிவங்களையும் கேள்விக்குட்படுத்தும் மக்கள் யுத்த குழுவின் போர்க்குரல் ஈழத்தமிழரின் உரிமைக்காக ஓங்கி ஒலிப்பது தென்னாசியப்பிராந்தியத்தில் சமூக விடுதலைக்காகப் போராடிவரும் அனைவரையும் ஈழப்போராட்டத்தின் பால் அக்கறைகொள்ளச் செய்வதுடன் பொதுவில் தேசங்களின் விடுதலையின்பால் புதிய அணுகுமுறைகளை மேற்கொள்ளவும் தூண்டுதலாயுள்ளது. தேசங்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கும் மக்கள் யுத்தக் குழுவினருடன் ஈழத்தமிழர் தம் தோழமைக் கரங்களை பிணைக்கின்றனர். தென்னாசியப் பிராந்திய தேசங்களினதும் மக்களினதும் விடுதலையை முன்னிறுத்தி தமிழீழ மக்கள் கட்சியினரான நாம் மக்கள் யுத்தக் குழுவினருக்கு எமது ஒருமைப்பாட்டையும் சிவப்பு வணக்கங்களையும் சமர்ப்பிக்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொது மனிதர்கள்

நாம் இங்கு பொதுமனிதர்கள் குறித்து உங்களுடன் உரையாடுகிறோம். பொது மனிதர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் மக்களுடன் கலந்து வாழ்பவர்கள், மக்களின் துயரங்களுடன், மக்களின் இன்னல்களுடன் தம்மை இணைத்து கொண்டவர்கள், தமது வாழ்வுக்காக, சுதந்திரத்துக்காக, தமது உரிமைகளுக்காக போராடி கொண்டிருக்கின்ற மக்களின் நம்பிக்கை குரலாய் ஒலிப்பவர்கள். மக்களின் திரண்ட ஆன்மீக சுடரொளியாய் பிரகாசிப்பவர்கள். மக்களின் ஆவேஷமாக, மக்களின் கண்டனமாக அமைபவர்கள்.

ஒருதேச விடுதலை போராட்டதில், இத்தகைய பொதுமனிதர்களின் பாத்திரம் முக்கியத்துவத்திற்குரியது, மதிப்புமிக்கது என்பதை நாம் அறிவோம். போராட்டத்தை வெகுஜனமயப்படுத்துவதிலும் சர்வதேசமயப்படுத்துவதிலும் இவர்கள் ஆற்றுகின்ற பங்கு கனதியானது. மக்களினதும் சர்வதேச சமூகங்களினதும் அங்கீகரிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக விளங்குகின்ற இத்தகைய பொதுமனிதர்களின் பிரசன்னமானது, ஒருதேசிய விடுதலை போராட்டத்திற்கு, ஆன்மீக பலத்தையும், உந்துதலையும் அளிக்க கூடியது.

பெருமைக்குரிய ஒவ்வொரு மக்கள் போராட்டமும் தன்னுள்ளிருந்து, கௌரவத்துக்குரிய பொதுமனிதர்களை உற்பவித்திருக்கின்றது. இந்தியாவின் காந்தி, தமிழகத்தின் ஈ.வே.ரா. பெரியார் சிலியின் பாப்லோ நெருடா, அமெரிக்க கறுப்பின மக்களின் மார்டின்லூதர் கிங், மல்கம் எக்ஸ், ஈரானின் ஆயதுல்லா கொமெய்னி,

வட அயர்லாந்தின்... , கிழக்கு தீமொரின்.. .. என விரிகின்ற மக்கள் போராட்டத்தில், இத்தகைய மாபெரும் பொதுமனிதர்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றார்கள். மக்களுடைய துயரங்களின், நம்பிக்கைகளின், ஆவேஷத்தின் சாரமாக அமைகின்ற பொதுமனிதர்கள், தமது மக்களின் நேர்மையான சாட்சிகளாக வெளிப்படுகின்றார்கள். அரசியல் அமைப்புக்களில் நேரடி தொடர்பற்றவர்களாக, சுயாதீனமாக செயற்படுகின்ற இவர்களின் வார்த்தைகள் சர்வதேச சமூகங்களின் அக்கறையையும் அனுதாபத்தையும் பெற கூடியன. தமது மக்கள்மீது ஆக்கிரமிப்பு அரசும் அதன் படைகளும் மேற்கொள்கின்ற அட்டுழியங்களை துணிவுடனும் உடனுக்குடனும் வெளிப்படுத்துவதன் மூலமாக, இவர்கள் தமது மக்களின் கண்டன குரலாக மட்டுமன்றி, மக்கள் மீதான வன்முறைகளை மட்டுப்படுத்துபவர்களாகவும் விளங்குகின்றார்கள்.

நமதுதேச விடுதலை போராட்டத்திலும் இத்தகைய பெருமைக்குரிய பொதுமனிதர்களை நாம் பெற்றிருக்கின்றோம். மரியாதைக்குரிய மதத் தலைவர்களாக, துணிவுமிக்க மனித உரிமை செயற்பாட்டாளர்களாக அவர்களை நாம் அறிந்திருக்கின்றோம். கடினமான, அபாயத்துக்குரிய சூழல்களிலும் நமது மக்களுடன் சேர்ந்திருந்து, அவர்கள் மீது சிறிலங்கா அரசும் அதன் படைகளும் இந்திய படைகளும் மேற்கொண்ட கொடுமைகளை இவர்கள் துணிவுடன் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். சிறிலங்கா அரசினதும் அதன் படைகளினதும் இனவாத சொரூபத்தை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தி வந்திருப்பதில் இவர்களின் பங்கு காத்திரமானது.

எனினும், இத்தகைய பொதுமனிதர்கள் தொடர்பாக, நமது அரசியல் அமைப்புக்கள், குறிப்பாக ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மத்தியில் ஆரோக்கியமான பார்வைகள் இருந்ததில்லை. அரசியல் என்பது தமக்கு மட்டுமே உரியது, என்ற "குத்தகை" மனோபாவத்துடன் செயற்பட்டு வந்திருக்கின்ற இந்த அமைப்புக்கள், நமதுதேசத்திலிருந்து உருவான பொதுமனிதர்களின் மக்கள்சார் பங்குபற்றலை அங்கீகரித்ததில்லை, மதித்ததில்லை. மாறாக, இத்தகைய பொதுமனிதர்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு இவை முயற்சித்து வந்திருக்கின்றன. மக்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகித்து, அவர்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தி வந்திருக்கின்ற இந்த அமைப்புக்கள், மக்களின் சுதந்திர குரலாக ஒலிப்பதற்கு, நமது பொதுமனிதர்களை அனுமதிக்கவில்லை. மக்கள் மீது, இந்த அமைப்பக்களும் இவை சார்ந்திருக்கின்ற அரசுகளும் மேற்கொண்டு வந்திருக்கின்ற அடக்குமுறைகள் குறித்து மௌனம் சாதிக்கும்படி, அவர்களை இந்த அமைப்புக்கள் நிர்ப்பந்தித்து வந்திருக்கின்றன. அவற்றை மீறி, அந்த மாபெரும் மனிதர்கள் மக்களின் குரலாக ஒலித்தபோது, அவர்களின் குரல்

(தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா நாணய மதிப்பிறக்கமும் ஈழத்தமிழர் எதிர்நோக்கும் இடர்களும்!



சிறிலங்கா நாணயமான ரூபாயின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 75 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் தற்போது 80 ரூபாவாகிறது. இதே விதத்தில் மற்றைய வல்லரசு நாடுகளின் நாணயங்களின் பெறுமதியும் அதிகரிக்கிறது. நாம் 75 ரூபா கொடுத்து இதுவரை வாங்கிய அதே வெளிநாட்டுப் பண்டம் ஒவ்வொன்றையும் தற்பொழுது 80 ரூபா கொடுத்து வாங்க நேர்ந்துள்ளது.

சிறிலங்கா நாணயத்தின் பெறுமதி இழப்பின் விளைவாக நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் சிறிலங்காவில் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு சில தமிழ்வர்த்தகர்களாயினும், இதன்விளைவாக ஏற்படும் விலைவாசி உயர்வினால் மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களே.

சிறிலங்கா அரசின் இந்த கொள்ளைக்கார நிதிக் கொள்கையினால் ஈழத்தமிழரான நாம் எவ்வாறு பாதிப்படையப்போகிறோம்? யுத்த சூழலின் மத்தியில் நாம் உயிரைப் பணயம் வைத்து உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தை நமது அன்றாடத் தேவைக்கான அத்தியாவசியப் பொருட்களில் செலவழிக்கிறோம். இவ்வாறு நாம் செலவிடும் ஒரு கிலோ அரிசியினதும், சீனியினதும், மண்ணெண்ணெயினதும்... இவ்வாறான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தினதும் விலை உயரும். அதேபோல், நாம் உபயோகிக்கும் இதர சேவைகளுக்கான கட்டணங்களும் உயர்த்தப்படுகின்றது. இப்படியாக நமது உழைப்பை நாம் அநியாயமாக சிறிலங்கா அரசுக்கு தாரைவார்க்க நேரிடுகிறது. ஏற்கனவே அநியாய விலைக்கு பொருட்களை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நமது தேசம், வறுமையின் பிடியில் அல்லலுறும் நமது தேசம் மேலும் பொருளாதார கொடுமைகளை எதிர்கொள்ள நேர்கிறது.

இதன்மறுபுறம், எம்மைக் கசக்கிப் பிழிந்து எம்மிடமிருந்து கறந்தெடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டே சிங்கள அரசு எம்மை அழித்தொழிப்பதற்கான ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. இவ்வாறு தொடர்ச்சியாக தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கொண்டு நடாத்துவதற்காக சிங்கள ஆளுங்குழுமம் தனது நிதிக் கொள்கையை அடிக்கடி சீரமைக்கிறது. நாணயப் பெறுமதியிறக்கத்தை அது இலகுவான வழியாகக் கைக்கொண்டு மக்கள்மீது மேலும் சுமைகளை ஏற்றி தான் தப்பித்துக் கொள்கிறது. அதேபோல், எம்மிடம் இருந்து பலவந்தமாக பறிக்கப்படும் நேரடி மறைமுக வரிப்பணமானது, ஒரு பகுதி அவர்களது அரசு யந்திரத்தை போஷித்து பாதுகாக்கப் பயன்படுகின்றது. பெரும்பகுதி உலகை ஆதிக்கம் செலுத்தும் சக்திகளுக்கு அந்நியச் செலாவணியாகவும், இன்னும் கடனுக்கான வட்டியாகவும் சென்று விடுகின்றது.

இப்படிப்பட்ட பொருளாதார, நிதிக்கொள்கைகளை நாம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? ஏன் இதற்கு கட்டுப்பட வேண்டும்? சிங்கள அரசு எம்மை தேசரீதியாக அடக்குவதென்பது தனது உழுத்துப் போன பொருளாதார நிதிக்கொள்கைகளையும் எம்மீது திணித்து எம்மை சுரண்டுவதன் மூலமும் தான். அவ்வகையில் நாம் சிங்கள அரசின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர அரசை அமைப்பதன் மூலம் எம்மை இன அழிப்பிலிருந்து மாத்திரமல்ல இந்த அநியாயகரமான சுரண்டல்களிலிருந்தும் விடுவித்துக் கொள்பவர்களாவோம். நமது தேசிய இறைமை என்பது இதுனையும் சேர்த்துத்தான்.

- விஜி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கு முஸ்லிம்கள் தம் தாயகம் நோக்கி...

தமது தாயகத்திலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டுள்ள ஒரே ஒரு சமூகமாக வடக்கு முஸ்லிம்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளார்கள். இதுவரை என்றும், எங்கும் நிகழ்ந்திடாத வன்கொடுமையாய், தேசிய அவமானமாய் நமது அரசியல் இயக்கத்தில் இது நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. தமக்கேயுரிய தனித்துவமான வாழ்க்கைமுறைகளோடு நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் எவ்வித காரணங்களுமின்றி ஒரே நாளில் வேரோடு கெல்லி எறியப்பட்ட கொடுஞ்செயல் நமது அரசியல் தலைமையினால், விடுதலைப் புலிகள் அமைப்பினால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒரு முழுச்சமூகமே அகற்றப்படுகின்ற அளவுக்கு வடக்கு முஸ்லிம்கள் இழைத்த மன்னிக்க முடியாத குற்றம் தான் என்ன? நமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கோ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கோ அந்த முஸ்லிம்கள் செய்த பாரிய துரோகம் தான் என்ன? அந்த முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு ஆதரவாக ஒரு சிறு நியாயத்தையும் விடுதலைப்புலிகள் அமைப்பினால் இன்றுவரை முன்வைக்க முடிந்திருக்கிறதா? அவ்வாறு இல்லையாயின் இந்த இனத்தூய்மையாக்கம் ஏன் நிகழ்த்தப்பட்டது? நமக்குள்ளும் (நமது தேசத்தினுள்ளும்) விடுதலைப்புலிகள் அமைப்புக்குள்ளும் வேரோடியுள்ள முஸ்லீம்களுக்கு எதிரான இனப்பகைமையினதும், இனவெறுப்பினதும் கூர்மையான வெளிப்பாடாக இதைக் கொள்வதா? எந்த விதப் பிரச்சினையுமின்றி முஸ்லிம்களுடன் நெருக்கமாகவும் சமத்துவமாகவும் தானே பழகிவந்திருக்கிறோம் என்று திரும்பத் திரும்பக் கூறுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்ற, சுயதிருப்தி கொள்கின்ற முயற்சி. நாம் உண்மையிலேயே முஸ்லிம்களுடன் நெருக்கமாகவும், சமத்துவமாகவும் பழகியிருப்போமாயின் எப்படி ஒரே நாளில் நமது அரசியல் தலைமையினால் அவர்கள் வெளியேற்றப்படுவதும் அதைத் தடுக்க முடியாதவர்களாக நாம் செயலற்று நின்றதும் சாத்தியமாகியது? எனவே நாம் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருப்போம்: முஸ்லிம்கள் நம்மிலிருந்து வேறுபட்ட தனித்துவமான சமூகமென்பதை முதலில் புரிந்து, ஏற்றுக்கொள்வோம். முஸ்லிம்கள் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற இத்தகைய வேறுபாடுகளுடனும் தனித்துவத்துடனும் நமக்கு ஏற்பட்ட முரண்பாடுகளின் திரட்சிதான் அவர்கள் வெளியேற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது என்ற உண்மையை உணர்ந்து கொள்வோம்.

வடக்கு முஸ்லிம்கள் நீண்ட பத்து ஆண்டுகளை அகதிவாழ்வில் கழித்துவிட்டார்கள் தாம் வெளியேற்றப்பட்ட கணத்திலிருந்தே தமது தாயகத்திற்கு திரும்பிச் செல்வதற்கான தீரா வேட்கையை அவர்கள் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். வருகின்றார்கள். அகதிச் சூழலில் ஒவ்வாமை, நிராகரிப்பு, அவமானம், சமூக, கலாச்சார சீரகுலைவு என்பவற்றுக்குள்ளும் தம்மை அமைப்பாக்குவதிலும் தமது உரிமைகளை தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்துவதிலும் அவர்கள் சிறப்பான வெற்றி பெற்றிருக்கின்றார்கள். தமது தாயகம் வடக்கே என்றும் அங்கு திரும்பிச் செல்வதற்கு விரும்புகின்றோம் என்பதை மட்டுமல்ல அவ்வாறு திரும்பிச் செல்வதற்கு தமக்குள்ள மறுக்க முடியாத உரிமைகளையும் வடக்கு முஸ்லிம்கள் மிக அழுத்தமாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள்.

வடக்கு முஸ்லிம்கள் மத்தியிலிருந்து ஓயாது வெளிப்படுகின்ற தாயகம் திரும்புவதற்கான கோரிக்கையை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். இத்தனை இழப்புகளுக்கும் அவமானங்களுக்கும் அடக்குமுறைகளுக்கு பின்பும் சொந்த மண்ணில் வாழ்வதற்குள்ள தமது விருப்பார்வத்தை எவ்விதத் தயக்கமுமின்றி ஒரே குரலில் அவர்கள் உரத்துக் கூறுகின்றார்கள். எனினும் தாம் தாயகம் திரும்புவது என்பது சிறிலங்கா அரசின் நிர்ப்பந்தத்தினாலோ அல்லது அடக்கப்பட்ட மக்களாகவோ நிகழாமல் சுதந்திரமும் சமத்துவமும் மிக்க பிரஜைகளாக, தமது தாயகத்தின் மீது பூரண உரிமை கொண்ட மக்களாக இடம்பெற வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

தாம் தாயகம் திரும்புவதற்கு விரும்புகிறோம் என்று வடக்கு முஸ்லிம்கள் வலியுறுத்தி வருவதன் பின்னே அவர்கள் வடக்கிலுள்ள ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழ்வதற்கு விரும்புகின்றார்கள் என்ற நேர்மையான ஆர்வம் பொங்கித் தொனிப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் இன்றுவரை பெரிதும் முஸ்லிம்களின் குடியிருப்புகளை அண்டியே அவர்கள் வாழ்கின்ற போதிலும் தம்மால் அந்த முஸ்லிம்களுடன் இணைய முடியாதிருக்கின்ற யதார்த்தத்தையே தாயகம் திரும்புவதற்கான அவர்களின் தொடர்ச்சியான குரல் தெரியப்படுத்துகின்றது. எத்தனை வேறுபடுகளும் முரண்பாடுகளும் இருந்த போதிலும் தமது சொந்த மண்ணில் சுதந்திரப் பிரஜைகளாக ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழ வேண்டியதன் சமூக அவசியத்தை அவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றார்கள்.

இவ்வகையில் வடக்கு முஸ்லிம்கள் தமது தாயகத்துக்குத் திரும்புவதற்கான சூழலை ஏற்படுத்துவதில் நாம் ஒரு தேசமாக செயற்பட வேண்டிய அவசியத்தைக் கொண்டிருக்கிறோம். வடக்கு முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்ற சமத்துவமும் அச்சமற்ற சூழலும் நிலவுவதற்கு நாம் ஒரு தேசமாக உத்தரவாதமளிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம். தாம் வெளியேற்றப்பட்ட பத்தாவது ஆண்டு நிறைவை அவர்கள் சந்திக்காத வகையில், அப்போது அவர்கள் தமது தாயகத்தில் தமது சொந்த வாழ்விடங்களில் அங்குள்ள ஏனைய சமூகங்களுடன் இணைந்து சுதந்திரமாக வாழக்கூடிய வகையில் நாம் செயற்படுவது அவசியம்.

இத்தகைய சூழலை உருவாக்குவதில் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள்ள கடப்பாடு மிக உயர்ந்தது. நமது தேசிய இயக்கத்தின் இன்றைய அரசியல் தலைமை என்ற அடிப்படையில் மட்டுமன்றி வடக்கு முஸ்லிம்களை வெளியேற்றியவர்கள் என்ற வகையிலும் அவர்கள் தமது தாயகம் திரும்புவதற்கான சூழல் உருவாக்கப்படுவதில் இறுதி உத்தரவாதம் அழிக்கக் கூடியவர்களாக விடுதலைப் புலிகள் விளங்குகின்றனர். கூடவே இத்தகைய உத்தரவாதமளிக்க வேண்டிய தார்மீக மற்றும் அரசியல் பொறுப்பைக் கொண்டவர்களாகவும் அவர்கள் இருக்கின்றார்கள். யுத்தத்தில் கைதிகளாக்கப்பட்ட சிங்கள இராணுவத்தினரை விடுவித்த, தமது இராணுவ இலக்குகளில் சிங்கள மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை இயன்றவரை தவிர்த்த . . . என விடுதலைப்புலிகள் அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகின்ற சிறந்த முன்னுதாரணங்களின் வரிசையில் வடக்கு முஸ்லிம்கள் தமது தாயகத்திற்கு திரும்புவதற்கான சூழலை உருவாக்குவது உயர்ந்த இடத்தை வகிக்கும்.

- வரதன் -

**இத்தனை இழப்புகளுக்கும் அவமானங்களுக்கும் அடக்குமுறைகளுக்கு பின்பும் சொந்த மண்ணில் வாழ்வதற்குள்ள தமது விருப்பார்வத்தை எவ்விதத் தயக்கமுமின்றி ஒரே குரலில் அவர்கள் உரத்துக் கூறுகின்றார்கள். எனினும் தாம் தாயகம் திரும்புவது என்பது சிறிலங்கா அரசின் நிர்ப்பந்தத்தினாலோ அல்லது அடக்கப்பட்ட மக்களாகவோ நிகழாமல் சுதந்திரமும் சமத்துவமும் மிக்க பிரஜைகளாக, தமது தாயகத்தின் மீது பூரண உரிமை கொண்ட மக்களாக இடம்பெற வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறைகளில் தமிழ் இளைஞர்கள் மீது பாலியல் பலாத்காரம் !

சிறிலங்கா இராணுவமும் பொலிசும் நமது போராட்டத்தின் ஆரம்ப நாட்கள் தொட்டு ஆயிரக் கணக்கில் தமிழ் ஆண்களை, குறிப்பாக இளம் ஆண்களை கைது செய்து சிறையில் அடைத்து சித்திரவதைக்குள்ளாக்கி வருகின்றன. விசாரணைகளின் போதும் தடுத்துவைத் திருக்கப்படும் காலங்களிலும் மிகக் குரூரமான மனித வதைகள் நமது ஆண்கள் மீது - இளம் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சித்திரவதைகளில் பாலியல் சித்திரவதைகளும் அடங்குகின்றன.

கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களில் 20 வீதமானோர் தடுப்புக்காவலில் இருக்குங்காலத்தில் வன்புணர்ச்சிக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுவதாக லண்டனிலுள்ள ஆய்வு நிறுவனமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. தமிழ் ஆண்களின் உயிர்வாழும் உரிமையை தமது கைகளுக்கெடுத்துக் கொண்டுள்ள பொலிஸ், இராணுவம், சிறை இலாகா ஆகிய சிங்கள வன்முறை இயந்திரத்தின் ஆண் உறுப்பினர்களும் அதிகாரிகளும் தமிழ் இளைஞர்களின் உடலை தமது உடமையாகக் கருதி அத்துமீறுகின்றனர்.

நமது தேசத்தின் யுத்த நிலைமைகளின் காரணமாக, சிறிலங்கா படைகளினால் கைது செய்யப்படும் நமது இளம் ஆண்களும் சிறுவர்களும் எதிர்கொள்ள நேரிடும் ஒருபாலுறவுத் தளத்திலான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் வன்புணர்ச்சி அட்டுழியங்கள் வெளிப்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளாது இருப்பதனால் தொடர்ந்தும் இந்த ஆக்கிரமிப்புப் படைகளால் நமது ஆண்களின் உடல் அத்துமீறலுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாவதற்கு வாய்ப்பாகின்றது. எதிரிதரப்பு ஆண்கள் நமது ஆண்களின் மீது பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொள்வதை நாம் இரு தளங்களில் காணமுடியும். ஒன்று தமது அதிகாரத்தின் வெளிப்பாடாக, தண்டனைகளாக எமது இளைஞர்களின் உடல்களை அத்துமீறுவது மற்றையது தமது பாலியல் தேவைகளுக்காக நமது ஆண்களின் உடலைப் பயன்படுத்த முனைவது.

இத்தகைய ஆண்கள் மீதான அத்துமீறல் ஒருபுறம் பாலாத்காரத்தைப் பிரயோகிக்கும் குற்றமாக அமையும் அதேநேரம், ஒருவரது தெரிவாக இல்லாத பாலுறவு முறைக்குள் அவரை பலாத்காரமாக உட்படுத்துவதும் ஒரு குற்றமாகும்.

இராணுவ முகாம்களிலும், பொலிஸ் கொட்டடிகளிலும், சிறைகளிலும் தமிழ் இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக ஒரு தேசமெனும் வகையில் நாம் விரிவான விழிப்புணர்வைக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்வகை பாலியல் துன்புறுத்தல்கள் அடிப்படை மனித உரிமை மீறலாகும். இக்குற்றங்களை பகிரங்கப்படுத்துவதனூடாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டனை பெறுவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவோம். துன்புறுத்தலுக்குள்ளான நமது இளைஞர்களுக்கு நியாயம் கிடைப்பதற்காகப் போராடுவோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட நமது இளைஞர்கள் பலரும் பெருத்த உளவியல் காயங்களை சுமந்து கொண்டு, தமக்குள் மௌனமாகக் குமுறியபடி வாழ்கின்றனர். இவர்கள் தாம் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படையாக தயக்கமற்று வெளிப்படுத்திடும் மனத்திடத்தையும் சூழலையும் உருவாக்குவோம். இவ்வாறு தமது கசப்பான அனுபவங்களை வெளிப்படுத்துவதன் மூலம் இவர்களின் மனக்காயங்கள் பெரிதும் ஆறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். இத்தகையவர்களது உளக்காயங்களை மாற்றுவதற்கான உளவியல் ஆலோசனை (counseling) சேவைகளை வழங்குவதில் தமிழீழத்தில் செயற்பட்டுவரும் புனர்வாழ்வு நிறுவனங்கள் கரிசனை செலுத்துவது வரவேற்கத்தக்கதாகும். அதேபோல் புலம்பெயர்ந்து வாழும் தேசாபிமானிகளும் நமது தேசம் எதிர்கொள்ளும் இந்த காயங்களை ஆற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கவேண்டியது இன்றைய வரலாற்றுத் தேவையாயுள்ளது. நம்மைப்போல் போராடும் தேசங்கள் பலவற்றிலும் பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் எதிர்கொண்ட - எதிர்கொண்டுவரும் உடல்வதைகளின் விளைவான உளக்காயங்களை அவர்கள் பெரிதும் சமூகத்தின் அக்கறையுடன் கூடிய பராமரிப்பின் மூலம் ஆற்றுவதனூடாக அக்கசப்பான படிவங்களிலிருந்து சமூகமாகக் கடந்து செல்லும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் அனுபவங்களிலிருந்து நாமும் நமது துயர்களை சமூகமாகக் களைந்து செல்ல கற்றுக்கொள்வோம்.

எதிரிதரப்பினாலோ அல்லது சொந்த சமூகத்தை சார்ந்தவர்களினாலோ பாலியல் தளத்தில் அது, பெண்ணுக்கு எதிராக என்றாலும் சரி ஆணுக்கு எதிராக என்றாலும் சரி பாதிக்கப்படும் நமது இளம்பிள்ளைகள், பெண்கள், ஆண்களது உளவியல் தொடர்பாக நாம் ஆழ்ந்த கரிசணையை வெளிப்படுத்திட வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும், தாம் புறக்கணிக்கப்படுவதாக, இழிதரமாக அனுகப்படுவதாக அவர்கள் உணராதவாறு அவர்களுக்கு சமூகமாக எமது அன்பையும் அரவணைப்பையும் வழங்கி அவர்களது சிந்தனையை புத்துயிர்ப்பிப்பது ஒரு தேசத்தின் சக மனிதர்கள் எனும் வகையில் நம்மனைவரினதும் கடமையாகும். குறிப்பாக, இன்றைய விடுதலையுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு தேச மக்கள் எனும் வகையில் நமது சொந்த சகோதரங்களின் உடல் உள உறுதியில் பரஸ்பர அக்கறை செலுத்த வேண்டியவர்களாக நாமுள்ளோம்.

- சியா

## பொதுமனிதர்கள்

(5 ஆம்பக்கத்தொடர்)

நிரந்தரமாகவே அடக்கப்பட்டிருக்கின்றது. வரலாற்றில் மிக அரிதாகவே இடம்பெற்றிருக்கின்ற இத்தகைய கோழைத்தனமான, வெறித்தனமான செயல்கள், நமது தேசவிடுதலை போராட்டத்தில் பல தடவைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

இத்தனை அடக்குமுறைகளையும் மீறி, நமது மக்கள் மத்தியிலிருந்து, இத்தகைய பொதுமனிதர்கள் தொடர்ந்தும் உருவாகி கொண்டிருக்கின்றார்கள் என்பது, நமது போராட்டத்தின் மக்கள் சாரத்தை, அதன் வெகுஜன வலிமையை அழுத்தமாக சுட்டி காட்டுகின்றது. இதுதான் நமதுதேச விடுதலை போராட்டத்தின் உயர் மாண்பு. எத்தனை அழிவுகளும் அடக்குமுறைகளும் தம்மீது திணிக்கப்படுகின்ற போதிலும் அவற்றை உடைத்து, நிமிர்ந்தெழுகின்ற நமது மக்களுடைய வலிமையின் ஆன்மீக குறியீடுகளாக, தொடர்ச்சியாக உருவாகின்ற இந்த பொதுமனிதர்கள் விளங்குகின்றார்கள். சொந்த எதிர்பார்ப்புகள் எதுவுமற்று, நமது மக்களின் உயிர்ச் சாரமாக, நமது மக்களுடன் கலந்திருக்கின்ற இவர்கள் நமதுதேச விடுதலை போராட்டத்தின் வெகுஜன பிம்பமாக அமைகின்றார்கள்.

நமக்கென சொந்த, இறைமைமிக்க தேச-அரசை அமைப்பதற்கான இறுதி கட்டத்தை அடைந்திருக்கின்ற இன்றைய நிலையில், இத்தகைய பொதுமனிதர்கள் இன்னும் கூடுதலாக, இன்னும் பகிரங்கமாக அவசியப்படுகின்றார்கள். தமிழீழத்தின் வெவ்வேறு பிரதேசங்களில், வேறுபட்ட நெருக்கடிகளின் கீழ் போராடி வருகின்ற நமது மக்களின் ஆன்மாவாக, சாட்சியாக அமைய கூடிய பொதுமனிதர்கள் இன்றைய கட்டத்தில் மிக அவசியப்படுகின்றார்கள். சிறிலங்கா அரசும் சிங்கள படைகளும் நமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைகளை கட்டுப்படுத்துவதற்கு மட்டுல்ல, நமது விடுதலை போராட்டத்தின் வெற்றிக்கும் இத்தகைய பொதுமனிதர்களின் பங்களிப்பு இன்றியமையாதாகின்றது.

வாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிங்கள இனவெறி

(2ஆம்பக்கத்தொடர்)

வகையினங்களாக, மனிதாபிமானம் என்ற பெயரில், சிறிலங்கா அரசை பலப்படுத்திய தன் மூலம் கொஞ்சம் நஞ்சம் இருந்த சந்தே கங்களையும் இந்தியா தீர்த்து வைத்தது.

தற்போது, நோர்வே, அமெரிக்கா மட்டுமல்ல, சிறிலங்கா இனவாத தரப்பில் பலரும் இந்திய அரசிற்கு அழைப்பு விட்டுள்ள ஒரு வாய்ப்பான நிலையில் மறுபடியும் முற்றுமுழுதாக தனது நலன்களை பேணுவதற்கு இந்திய அரசு காரியங்களை நகர்த்துகின்றது.

நோர்வே அரசின் தலையீட்டை விட, இந்திய அரசின் தலையீட்டை, பிக்குமார் அமைப்புகளும், சோபித தேரோ போன்றவர்களை பின்புலமாக கொண்ட பல இனவெறிச்சக்திகளும் விரும்புகின்றனர் என்பதை நாம் வேறெப்படி புரிந்து கொள்ள முடியும்? நமது கவனத்தை இந்த இனவெறிச்சக்திகளின் பால் திருப்பிவிட்டு, இந்திய, சிறிலங்கா ஆளும்குழுமங்கள் தமது காரியங்களை கன கச்சிதமாக நகர்த்தி வருகின்றன.

இந்தியா உட்பட ஆதிக்க சக்திகள் சிறிலங்கா அரசின் பின்னே நிற்காவிடில், தமிழீழம் விரைவில் அமைவது திண்ணம். இதனை தடுத்து நிறுத்தியது மட்டுமல்லாது, தற்போதுள்ள சமபலநிலையில் ஈழததமிழர் சமத்துவமான அரசியல் உரிமைகளை பெற்றுவிடக்கூடாது என்பதில் இந்திய அரசு கவனத்தை குவித்துள்ளது. தான் நினைக்கின்ற அளவிற்கு உரிமைகள வரையறுத்து அதனை ஈழத்தமிழர் ஏற்றுக்கொள்ள செய்ய வேண்டும். இதில் தனது முற்றுமுழுதான நலன்கைள இந்திய அரசு கொண்டுள்ளது. இதற்கு ஒரு வழிவகையாக, சிறிலங்காவிலுள்ள இனவெறி அமைப்புகளை ஊக்குவித்து, அழுத்தங்களை அதிகரித்து, இப்படியான சூழலில் "*அதிகமாக*" எதனையும் எதிர்பார்க்காது கிடைப்பதை பெற்றுக்கொள் ளுங்கள். அதற்கு ஆவண செய்கின்றேன் என ஈழத்தமிழர்களை நிர்ப்பந்திக்க வைப்பது நோக்கி இந்திய அரசு காரியங்களை நகர்த்துகின்றது. சிறிலங்க அரசு இப்படியான கடும் அழுத்தங்களுக்கு மத்தியில் இவ்வளவு தருவதே பெரிய விடயம் என்றவகையில், தமிழ்மக்களை பணிய வைத்துவிடலாம் என்று இந்திய அரசு மறுபடியும் ஒரு ''இனிய" கற்பனையொன்றை செய்து செயற்படுத்த வருகின்றது.

சிங்கள இனவெறி அமைப்புகளின் பிரதான பிரமுகர்களுக்கும் இந்திய உளவுப்பிரிவிற்கும் தொடர்புகள் உள்ளன. மேலும் சிறிலங்கா ஆட்சி அதிகாரத்தை அனுபவித்து வரும் ஆளுங்குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு கட்சிகளுக்கும் கூட, "சிங்கள உறுமய" போன்ற இனவெறியமைப்புகளை போசித்து பேணுவதில் அடிப்படை நலன்கள் உள்ளன. அவரவர் தேவைகள் சார்ந்து ஒருவரை ஒருவர் அவர்கள் பலப்படுத்தட்டும், பயன்படுத்தட்டும். பயன்படுத்திப் பின்னர் 'ஞானோதயம்' வந்து ஒருவரை ஒருவர் அம்பலப்படுத்தட்டும். அது அவர்களின் பிரச்சினை என ஒதுக்கிவிடாது, பலதசாப்த இரத்தம் சிந்தும் நமது விடுதலைப் போராட்டமானது இந்த ஆதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலை விழிப்புடன், துல்லியமாக அவதானித்து, எமது தேசத்தின் நலன் சார்ந்த நிகழ்ச்சி நிரலை நாம் முன்னகர்த்த வேண்டும்.

ஆதிக்க சக்திகள் வரலாற்றிலிருந்து கற்க மறக்கும் மறுக்கும் விடயமான மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகின்றார்கள் என்பதை மீளவும் எமது சந்ததி அவர்களுக்கு நிரூபிக்கும் வகையில் எமது அணுகுமுறைகள் அமைய வேண்டும்.

தருமு

## அடக்குமுறை...

(1ஆம்பக்கத்தொடர்)

கொண்டும் விமானகுண்டு வீச்சுகள்கொண்டும், தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. ஒரு பிடி அரசிக்காக மக்கள் நம்பமுடியாத அளவிற்கு தமது உழைப்பை விற்க வேண்டிய நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். வயோதிப மடங்களில் நம் மூத்த பிரஜைகள் அவலச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

எமது தேசத்தின்மீதான கூட்டுத்தண்டனைகளின் நடவடிக்கைகளை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்துவதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச அபிப்பிராயத்தை எமது பக்கத்திற்கு வெல்வதற்கான நுட்பமான செயற்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். நமது போராட்டத்தின்பால், நமது மக்களின் அவலங்கள் பால், இன்னுமின்னும் சர்வதேச அபிமானத்தை பெறுவதற்கு இன்னும் கடுமையாக, கூட்டாக நாம் செயற்படுவோம்.

## தமிழீழ குடியரசே...

(1ஆம்பக்கத்தொடர்)

பிரிவினருடன் நாம் இதற்குமேலும் எவ்வாறு "நீதியும் நேர்மையுமான" அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையைப் பற்றி சிந்திக்க முடியும்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்படும் நமது தேச விடுதலைப் போராட்டத்தின் இதுவரைகால கடும் இடக்களுடன் கூடிய நீண்ட பயணத்தின் விளைவாக தமிழீழ தாயகத்தின் 70 வீதத்திற்கும் அதிகமான ஆள்புல பிரதேசம் விடுதலைப் பிரதேசமாயுள்ளது. இந்நிலையில் ஒரு தேசமெனும் வகையில் நமது எதிர்பார்ப்புகள் இதற்குமதிகமான தேசிய உரிமைகளை நாம் அனுபவிப்பதை நோக்கி நகர வேண்டுமென்பதாகுமே தவிர, நமது தேசத்தின் அரசியல் ஆளுமையையும் உணர்வுகளையும் சிதைக்கும் வகையிலான தீர்வுகளையல்ல.

இன்று, ஈழத்தமிழர் அனைவருமே தமிழீழ அரசை அமைப்பதற்கான காலம் அண்மித்து வருவதை உணர்வதுடன், சுதந்திர தமிழீழத்தில் மாத்திரமே நமக்கு நிரந்தர நிம்மதி கிடைக்கும் எனும் ஏகோபித்த எதிர்பார்ப்புடன் உள்ளனர். எமது தேசத்தின் அனைத்துத்தரப்பினரது நாட்டங்களும் தமிழீழ அரசை அமைப்பது நோக்கியே குவிந்துள்ளது. இந்நிலையில், சிறிலங்கா அரசு நமது தேசத்தையும் நமது விடுதலைப் போராட்டத்தையும் இழிவுபடுத்தும் நோக்குடன் முன்வைக்கும் அற்பத் தீர்வுகளை ஒதுக்கிவிட்டு நமது உயர் இலட்சியமான தமிழீழ குடியரசை அமைப்பதை நோக்கி உறுதியுடன் முன்னேறுவோம்!

## மக்கள் களம்

கடைசியாக வந்த பத்திரிகைகள் விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் தன்மையை காட்டுகின்றது. ஏன் இந்த சரிவுக்கு செல்கின்றது என்று நான் மீண்டும் மீண்டும் யோசித்து பார்த்தேன். இன்று எங்கு திருமபினாலும் இதுவே கதைக்கப்படும் பிரச்சனையாக உள்ளது. மேலும் புலிகள் ஒரு பெரும் சக்தியாக தங்களை நீரூபித்துக்காட்டியுள்ளார்கள். அவர்கள் பக்கம் தவறுகள் உள்ளது உண்மை. ஆனால் அவர்கள் சக்தி என்பதும் இந்த விடயத்திற்கூடாகவும் தேசிய விடுதலையில் அக்கறை உள்ள அனைவரும் கடந்து போயாக வேண்டும் என்பதுதான் யாதார்த்தம் என்று நான் நினைக்கின்றேன்.

வித்தியன் (கொழும்பு)

இன்றைய கட்டம் ஒரு நெருப்பு, இன்றைய எமது பிரச்சனைபற்றி ஒவ்வொருவரும் ஏதாவது கருத்து நிலையை எடுத்து சொல்லியாக வேண்டும். மழுப்பிக்கொண்டிருக்க முடியாது. இங்கு மட்டுமல்ல தமிழகத்தில் கருணாநிதி மட்டுமல்ல, உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் தனது நிலையை சொல்லியாக வேண்டிய கட்டத்திற்கு நமது போராட்டம் வந்துள்ளது. பலரது துரோகத்தனங்களை, அரசியல் வங்குரோத்துகளை தோலுரித்துக்காட்டும் , யார் யார் எங்கெங்கு நிற்கின்றனர் என்பது துல்லியமாக தெரியும் ஒரு நெருப்புச்சோதனை. மேலும் இன்றைய வெற்றியின் உண்மையான தார்ப்பரியம் நமது மக்களும், விடுதலைப்புலிகளும் கூட சரியாக புரிந்து கொள்ளாமாலே உள்ளனர் என்று நாம் திடமாக நம்புகின்றேன். ஏனென்றால், உலகளவிலுள்ள சக்திகளும், சிறிலங்கா அடக்குமுறை சக்திகளும் புரிந்து கொண்ட அளவிற்கு நமது மக்களும் விடுதலைப்புலிகள் புரிந்து கொள்ள வில்லை என்றே பார்க்கின்றேன். அப்படி புரிந்து கொண்டிருந்தால் இருதரப்பின் நடவடிக்கைகளிலும் வெளிப்பாடுகளிலும் இன்னும் எவ்வளவோ பண்பு மாற்றங்கள் காணப்பட்டிருக்க வேண்டும்.

தங்கமலர் (செங்கலடி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

## கறுப்பு ஜூலைத் தியாகிகளை நினைவு கூர்வோம் !

சிங்கள இனவெறிக்கு தமிழ் மக்களை பலிகொண்ட ஜூலை இனப் படுகொலைகள் நிகழ்ந்து இத்துடன் 17 வருடங்களாகின்றன. இந்த பதினேழு வருட காலத்துக்குள் சிங்கள அரசு தன்னை பாசிசத்தின் ஒரு பிரதிநிதியாக வளர்த்தெடுத்துக் கொண்டுள்ளது. தானே திட்டமிட்டு இனஅழிப்பை பல்வேறு வடிவங்களிலும் முன்னெடுத்து வருகிறது. 83இல் தமிழர் எதிர்கொண்ட வன்கொடுமையை சகித்துக்கொள்ள முடியாத நமது இளம் சந்ததியினர் தேசப் போராட்டத்தில் ஒரு புதிய பாய்ச்சலை தோற்றுவித்தனர். பல்வேறு இழப்புகள், தியாகங்கள், பின்னடைவுகளுக்கூடாக பயணித்து இன்று நாம் நமது இலட்சியக் கனவான தமிழீழத்தின் வெற்றிப்படிகளில் கால்பதித்து விட்டோம். நமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளோம். இந்த பெருமிதமான வரலாற்றுக் கட்டத்தில் வாழும் நாம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களும், தமிழீழம் பற்றிய கனவை தேசத்தில் விதைத்ததற்காக சிங்கள அரசினால் வெலிகடை சிறையில் படுகொலைக்கு உள்ளானவர்களுமான போராளிகள் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் உட்பட படுகொலைக்குள்ளான வெலிகடை தியாகிகளை பெருமதிப்புடன் நினைவு கூர்வோம். ஜூலை வன்முறைகளுக்கு பலியான போராளிகளுக்கும் படுகொலைக்குள்ளான ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கும் தேசமாக திரண்டு அஞ்சலி செய்வோம்.

நாம் கடந்து வந்த நமது விடுதலைப் போராட்டத்தின் பாதையில் எத்தனையாயிரம் மக்களும் போராளிகளும் இந்த உன்னத பயணத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர்! நமது தேசம் இதற்காக கொடுத்துள்ள விலைகளுக்கும் தியாகங்களுக்கும் ஈடு இல்லை. நமது மக்களின் சுதந்திரமான வாழ்வை உறுதிப்படுத்தும் தமிழீழ தாயகத்தை மீட்பதற்காக நாம் தேசமாக நம்மையே அர்ப்பணத்தி நமது விடுதலைப் போராட்டத்தைப் பலப்படுத்தி வந்திருக்கிறோம். நமது தேசத்தின் விலைமதிக்க முடியாத அர்ப்பணிப்புகளுக்கு உரிய பெறுமதி கிடைப்பதை உறுதி செய்வதே இன்றைய கட்டத்தில் உயிர்வாழும் நம்மனைவரினதும் கடமையாகும்.

15 வருடங்களுக்கு முன்னர் திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது நமக்காக முன்வைக்கப்பட்ட தீர்வுகளை நாம் கடந்து வந்துவிட்டோம். தற்பொழுது நாம் முற்றிலும் சுயாதீனமான இறைமையுடைய தேசத்தினராவோம். நமது இறைமை என்பது நமக்கான தாயகத்தை - தமிழீழக் குடியரசை ஸ்தாபிப்பதுடன் பிணைந்ததாகும். சிறிலங்கா அரசு நமது விடுதலையை அழித்தொழிக்கும் நோக்குடன் முன்வைக்கும் அற்ப தீர்வுகளில் திருப்திகாணும் கனவுகள் தற்பொழுது நமது தேசத்தின் எந்தப் பிரிவினரிடமும் கிடையாது. ஈழத்தமிழர் அனைவரும் தமிழீழ அரசை ஸ்தாபிப்பதிலேயே உறுதியுடனுள்ளோம். தாயகத்தை மீட்கும் உன்னத பணியில் தேசத்தின் அனைத்துத் தரப்பினரும், அனைத்து அரசியல் பிரிவினரும் பங்கேற்போம். நமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோம். இதுவே வெலிகடை தியாகிகளுக்கும் போராட்டத்தில் மரணித்த அனைத்துப் போராளிகளுக்கும் மக்களுக்கும் நாம் செய்யும் உயர்வான அஞ்சலியாகும்.

## தென்தமிழீழத்தில் பட்டதாரிகள் போராட்டம்!

தென்தமிழீழத்தின் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு கோரிக்கையை முன்வைத்து மட்டக்களப்பு நகரின் காந்தி சிலையின் முன் உண்ணாவிரதப்போராட்டத்தை தொடக்கியுள்ளனர். தமது கோரிக்கை நிறைவேறாதபட்சத்தில் இப்போராட்டத்தை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமாக வடகிழக்கு மாகாணசபை தலைமையகத்தின் முன்னால் நீடிக்கவுள்ளனர்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தில் காத்திரமாக செயலாற்ற வேண்டிய பட்டதாரிகள், பல வருடங்கள் கல்வியில் செலவிட்டு, பல்லாயிரம் ரூபாய்களையும் செலவிட்டு, இன்னும் பல வருடங்களை தொழில் வாய்ப்பிற்காக காத்திருந்து ஏமாற்றமுற்று, விரக்தியுற்று, எதிர்காலம் குறித்த அச்சத்துடன் உண்ணாவிரதப் போராடத்தில் குதிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

15-25 வயது வரையிலான மிகவும் உன்னதமான காலத்தை கல்வி கற்பதில் ,மிகுந்த போட்டாபோட்டிகளுக்கு மத்தியில் செலவிடும் இப்பிரிவினர், சமூகத்திலுள்ள வேறெந்த தொழில்துறை பற்றிய அனுபவமும் பரிச்சயமும் அற்றவர்களாக இருக்க வேண்டிய நிலைமையை நமது கல்விமுறையும் சமூகமும் கொண்டுள்ளது. இப்படியான அறிவுத்துறை ஆற்றலை பெறுவதில் தமது முழு ஆற்றலையும் நேரத்தையும் செலவிட்டு வெற்றியுடன் வெளியில் வரும் பட்டதாரிகளுக்கு அதற்குரிய தொழில்வாய்ப்புகள் கிடைக்காது விடில், அவர்கள் திணறித்திண்டாடி விடுகின்றனர். மனஅமைதியிழந்து நம்பிக்கை வரட்சியுற்று மனநிலை பாதிப்புறும் நிலைக்கும் சென்று விடுகின்றனர்.

ஐம்பது வருட பழமை வாய்ந்த கல்வி முறைமையும், தற்போது உலகவங்கியின் சொற்படி எழுதப்படும் கல்வித் திட்டங்களும், கல்வி பற்றிய அழுகிப்போன சித்தாங்களுக்கும் இந்த இளம் தலைமுறை பலியாக்கப்படுகின்றனர்.

பட்டதாரிகள் தமது அவலநிலையை இட்டு கவன ஈர்ப்பை மேற்கொள்ள உண்ணாவிரத போராட்டத்தை தொடக்கியுள்ளனர். இது பட்டதாரிகளின் பிரச்சனை மட்டுமல்ல. உண்மையில், நாம் நாளாந்தம் எதிர்கொள்ளும் தேசிய ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகும். இது ஒருவகையில் அடிப்படை மனிதவுரிமைப் பிரச்சனையும் கூட.

வேலையில்லாப் பட்டாளமாகி விட்டிருக்கும் இந்த பட்டதாரிப் பிரிவினருக்கு பின்னால், இந்த வரிசையில் சேர்ந்து கொள்ள இன்னும் பலர் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் ஆயிரக் கணக்கணக்கானோர் பரீட்சை எழுதத்தயாராகின்றனர். இது ஒரு தொடர்கதையாகும். இவர்கள் அனைவரும் எமது தேசத்தின் எதிர்காலங்கள். இவ்ஒவ்வொருவரினதும் ஆற்றலும் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டு சிதைக்கப்படுகின்றது. எனவே இந்த அநீதியை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து அணிதிரண்டு குரல் கொடுக்க வேண்டும். இவர்களை ஆதரித்துப் பலப்படுத்த வேண்டும்.

இக் குறிப்பான உண்ணாவிரதப் போராட்டத்தின் இலக்கு இவர்களுக்கு ஒரு தற்காலிக தீர்வினையே தரும். எனினும் இவ்வகைப் போராட்டங்கள் நமக்கு நமது தேசிய விடுதலையின் அவசியத்தை, நமது கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றிற்கான சொந்த யதார்த்தமான திட்டமிடலின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. தற்போதுள்ள கல்விமுறையும் வேலைவழங்கும் முறையும் ஒரு காத்திரமான இந்தப் புதிய நூற்றாண்டுக்கான, நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு தடையாகவே உள்ளது. எம்மீதான தேசிய ஒடுக்குமறையானது தகர்க்கப்பட்டு, சொந்த அரசமைக்கும் அவசியத்தை மேலும் வலியுறுத்துவதாகின்றது.

யுத்தவெறியுடன், கோடிக்கணக்கான பணத்தைக்கொட்டி, தொடர்ச்சியாக கொலைக்குற்றம் இழைத்துவரும் சிறிலங்கா அரசானது சிங்கள தேசத்திலுள்ள பல பட்டதாரிகளை வேலை இன்றி நடுத்தெருவில் விடப்பட்டுள்ளது. அதேசமயம் படையில் சேர்பவர்களுக்கு 15-20 ஆயிரம் வரை ஊதியம் வழங்கப்படுகின்றது. இதனைவிட வீட்டுத்திட்டங்கள், மானியத்திட்டங்கள் அள்ளி வழங்கப்படுகின்றன. இவ்வாறாக சிறிலங்கா அரசின் ஆதிக்க சகதிகள் சொந்த தேசத்திற்குள்ளேயே பாகுபாட்டை வளர்த்தெடுத்து தமது ஆதிக்கத்தை பாதுகாத்து வருகின்றன. இப்படிப்பட்ட ஆதிக்க சக்திகள் தேசியரீதியாக அடக்கப்பட்டு வரும் தமிழ், முஸ்லீம் பட்டதாரிகள் விடயத்தில் அத்தனை முக்கியத்துவத்தை இலகுவில் வழங்கும் என எதிர்பார்க்க கூடாது. இவ்விடயத்தில் நாம் பிரக்ஞையுடன் இருக்க வேண்டும். தொடர்ச்சியான போராட்டங்களின் மூலமே தமிழ், முஸ்லிம் பட்டதாரிகளின் கோரிக்கைகள் குறைந்தபட்சமாவது நிறைவேற்றப்படும். எனவே அடக்கப்படும் சமூகங்களின் அத்தனை பிரிவினரும் பட்டதாரிகளின் போராட்டதை ஒன்றிணைந்து பலப்படுத்த வேண்டும்.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்